# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## <u>விசாரணை நாள் 10.07.2026</u>

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் SA 11614-E-2024</u>**

| | | |
|---|---|---|
| திரு அ.பாலகிருஷ்ணன் | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>உதவி ஆணையர்,<br>நில நிர்வாக ஆணையரகம்,<br>சேப்பாக்கம், சென்னை - 600 005 | .. | பொது அதிகார அமைப்பு |

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு அ.பாலகிருஷ்ணன் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நில நிர்வாகத் துறையின் உதவி ஆணையர் திரு கு.ச.ராம்குமார் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 10.05.2024 |

**<u>கோரிய தகவல்</u>**:-

நில நிர்வாக ஆணையருக்கு தான் 04.10.2023 அன்று அனுப்பிய மேல்முறையீட்டு மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவலை தனக்கு வழங்கக் கோரியுள்ளார்.

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 29.06.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 30.08.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை சேப்பாக்கம், நில நிர்வாக துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும். பின்னர் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு 15.07.2024 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லையென ஆணையத்திடம் தெரிவித்தார்.

5) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

**மனுதாரர் 10.05.2024 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக மனுதாரருக்கு 15.07.2024 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பதில் திருப்திகரமாக இல்லையென ஆணையத்திடம் தெரிவித்தார். பொதுத் தகவல் அளித்துள்ள பதில் திருப்தியளிக்கவில்லை என்றால், மனுதாரர் சம்மந்தப்பட்ட துறையின் உயர் அதிகாரி அல்லது நீதிமன்றத்தை நாடியே நிவாரணம் தேடிக் கொள்ள வேண்டுமென மனுதாரருக்கு அறிவுறுத்தி, இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 11614-E-2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005

திரு அ.பாலகிருஷ்ணன்,
மாரியம்மன் கோவில் தெரு,
கல்ப்பட்டு - 605 108,
விழுப்புரம் மாவட்டம்

Copy to file
CR/PA